**முதன்மை மாவட்ட  உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (கூடுதல் முழு பொறுப்பு)**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், மாசி திங்கள் 30ம் நாள்**

E. A. No. 75/2017
**இன்**
**நிறைவேற்று மனு எண்.91/1997**
**இன்**
அசல் வழக்கு எண். 193/1996

1. மல்லிகா
2. சரோஜா
3. வள்ளியம்மாள்
4. விசாலாட்சி
5. அம்மணியம்மாள்
6. கண்ணம்மா
7. விஜயா
8. அமுதா
9. பார்வதி
10. அருக்காணி
11. வள்ளியம்மா
12. தங்கமணி
13. ஈஸ்வரி
14. வசந்தாமணி
15. பாப்பாத்தி
16. சாந்தி
17. கண்ணம்மா
18. நாச்சம்மாள்
19. முத்தம்மாள்
20. பாப்பம்மாள்
21. குப்பாள்
22. பழனியம்மாள்
23. சுப்பாள்
24. பாப்பன்
25. பழனாள்
26. சாந்தி

27. அருக்காணி
28. செல்லம்
29. கன்னியம்மாள்
30. செல்வி
31. பொன்னம்மாள்
32. பழனாத்தாள்
33. லட்சுமி
34. கருப்பாள்
35. வேலம்மாள்
36. சரஸ்வதி
37. தங்காள்
38. புஷ்பாள்
39. ஜெயா
40. வீரம்மாள்
41. செல்லம்மாள்
42. காவேரி
43. மயிலாள்
44. ரங்கம்மாள்
45. அருக்காணி
46. சாந்தாள்
47. லட்சுமி
48. முத்தாள்
49. சாந்தாமணி
50. கமலம் ..மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகள்

..எதிர்..

1. முருகேசன் (இறப்பு)
2. தனலட்சுமி
3. தங்கசாமி .. எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தீர்ப்பாணை பெற்றவர்கள்

இம்மனுவானது கடந்த 04.03.2025ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மோகன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சின்னச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயகாந்த் அவர்கள்

முன்னிலையாகியும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பு எழுத்துபூர்வமான வாதுரை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

நிறைவேற்று மனு எண்.91/1997ஐ தள்ளுபடி செய்யக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 47ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**:—

**2.1** மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள். மனுதாரர்களுக்கு நிறைவேற்று மனுவில் அறிவிப்பு வழங்கப்படவில்லை. நிறைவேற்று மனுவில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கறவு செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி E.A.No.14/2017 தாக்கல் செய்யப்பட்டு, தள்ளுபடி செய்யப்படாததை எதிர்த்து மனுதாரர்கள் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் CRP No.1757/2017 ஐ தாக்கல் செய்துள்ளார்கள். கடந்த 26.04.2017ம் தேதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**2.2** 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாணை பெற்றவரின் வாரிசுகள் அல்ல. 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் மோசடியான உயில் ஆவணத்தை உருவாக்கி அதனடிப்படையில் தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரியுள்ளதால் நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். தாவா சொத்தான 4.52 ஏக்கர் பூமியானது அரசு நிலமாகும். அரசால் பழனி மகன் முனியனுக்கு பட்டா வழங்கப்பட்டது. தீர்ப்பாணை பெற்றவருக்கு மேற்படி முனியனுடனோ அல்லது தாவா சொத்துடனோ எவ்வித தொடர்பும் இல்லை. முனியனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் கைவிட்டு விட்டார். முனியன் தற்போது எங்கு உள்ளார் என்று

தெரியாது. வருவாய் ஆவணங்களில் முனியன் பெயருக்கு பதிலாக தீர்ப்பாணை பெற்றவரின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. தீர்ப்பாணை பெற்றவரின் சட்டவிரோத செயல் அரசாங்கத்திற்கு தெரியவந்தவுடன் அவரது பெயர் பட்டாவில் இருந்து நீக்கப்பட்டு, கடந்த 12.11.1988ம் தேதி மனுதாரர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது.

**2.3** தீர்ப்பாணை பெற்றவரான முருகேசனின் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்தான விபரமும், மனுதாரர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள விபரமும் முருகேசனால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நிலமில்லாத ஏழை மக்களான மனுதாரர்களுக்கு அரசு புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டுவதற்கு பட்டா வழங்கப்பட்டு அதில் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டியுள்ளார்கள். தீர்ப்பாணை பெற்றவர் அவரது பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்தானதற்கு எதிராகவும், மனுதாரர்களுக்கு பட்டா வழங்ககூடாது என்றும் பரிகாரம் கோரி நீதிபேராணை மனு எண்.9630/1989ஐ தாக்கல் செய்தார். மனுதாரர்களுக்கு ஏற்கனவே பட்டா வழங்கப்பட்டதால் தீர்ப்பாணை பெற்றவர் அவராகவே மேற்படி நீதிபேராணை மனுவை திரும்ப பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி மனு கடந்த 29.03.1990ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

**2.4** தீர்ப்பாணை பெற்றவருக்கு சொத்தில் உரிமை மூலம் இல்லை. மனுதாரர்களுக்கு மட்டும் தான் மனு சொத்தில் உரிமையுள்ளது. தீர்ப்பாணை பெற்றவருக்கு ஆதரவாக வழங்கப்பட்ட பட்டா ரத்தாகி விட்டதாலும், மனுதாரர்களுக்கு அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டுள்ளதாலும், பட்டா ரத்தானதை கேள்வி கேட்டு தீர்ப்பாணை பெற்றவர் தாக்கல் செய்த நீதிபேராணை மனு தள்ளுபடியாகிவிட்டதாலும் அசல் வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பாணை டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட வழக்கில் உள்ள தரப்பினர்களுக்கு இடையே எழும் கேள்விகளை நிறைவேற்று நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். எனவே, மனு சொத்தை சுவாதீன ஒப்படைப்பு கோருவதற்கு

2,3 எதிர்மனுதாரர்களுக்கு உரிமையில்லை. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும் அது நிறைவேற்றக்கூடியது அல்ல. அசல் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணை செல்லத்தக்கதல்ல என்பதாலும், நிறைவேற்று மனு நடவடிக்கைகள் அனைத்தும் செல்லத்தக்கதல்ல என்பதாலும், நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்யக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :-**

**3.1** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைபடியும் நிலைக்கதக்கதல்ல. நிறைவேற்று மனுவில் மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்று கூறுவது தவறு. EA.No.14/2017 முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் CRP No.1757/2017ல் உறுதி செய்துள்ளது. தீர்ப்பாணை பெற்றவர் அவரது சொந்த விருப்பத்தில் நல்ல மனநிறைவுடன் தானாக முன்வந்து 2,3 எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக மனுசொத்தை 17.05.2014ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் எழுதிவைத்துள்ளார். அது மேற்படி முருகேசனின் கடைசி உயிலாகும். 2, 3 எதிர்மனுதாரர்கள் காலஞ்சென்ற முருகேசனின் வாரிசுகள். மனுதாரர்கள் காலம்சென்ற முருகேசனுக்கு தொடர்பற்றவர்கள். மேற்படி முருகேசன் எழுதி வைத்த உயில் பற்றி கேள்வி கேட்க அவர்களுக்கு உரிமையில்லை.

**3.2** முருகேசன் உயிருடன் இருந்த போதே சுவாதீன ஒப்படைப்பு கோரி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்தார். நிறைவேற்று மனு நிலுவையில் இருந்தபோது மேற்படி முருகேசன் மனு சொத்தை பொறுத்து 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு உயில் எழுதிக்கொடுத்துள்ளார். காலம்சென்ற

முருகேசனின் வாரிசுகள் என்ற அடிப்படையிலும் அவர் எழுதி வைத்த உயில்மூலமும் 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு மனு சொத்தில் உரிமையுள்ளது.

**3.3** ஒரு பழனி மகன் முனியனுக்கு அரசாங்கத்தால் மனு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையானது. முனியனுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் தொடர விருப்பம் இல்லாத காரணத்தால் சட்டப்படி மனு சொத்து 1ம் எதிர்மனுதாரர் முருகேசனுக்கு ஒதுக்கப்பட்டது. தீர்ப்பாணை பெற்றவர் எதிர்மனுதாரர்கள் மற்றும் பலருக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்து அதில் கடந்த 17.07.1997ம் தேதி மனு சொத்தின் முழு உரிமையாளர் முருகேசன் என்றும், மனுதாரர்களையும் மற்றும் பலரையும் மனு சொத்தில் இருந்து காலி செய்து அதன் காலி சுவாதீனத்தை ஒப்படைக்கவும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

**3.4** மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆட்சேபனைகள் அனைத்தையும் அசல் வழக்கிலேயே குறிப்பிட்டுள்ளார்கள். முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு மனுதாரர்களின் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்மீது தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டதால் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை இறுதியானது. மனுதாரர்களால் சட்டப்படி எந்த ஆட்சேபனையும் செய்ய இயலாது. நிறைவேற்று மனுவில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள் கழித்து மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.193/1996ல் கடந்த 17.07.1996ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடோ அல்லது தடை உத்தரவோ நிலுவையில் இல்லை.

**3.5** மேல்முறையீடோ அல்லது தடை உத்தரவோ நிலுவையில் இல்லாதபோது நிறைவேற்று நீதிமன்றம் தீர்ப்பாணையின் செல்லும் தன்மையை கேள்வி கேட்க இயலாது. நிறைவேற்று நீதிமன்றம் தீர்ப்பாணையை மீறி

செயல்படமுடியாது. மனுதாரர்கள் இம்மனுவில் எழுப்பியுள்ள ஆட்சேபனைகள் அனைத்தும் அ.வ.எண்.193/1996ல் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பிரச்சனையை மனுதாரர் மீண்டும் குறிப்பிட்டு இரண்டாவது சுற்று வழக்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.27 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.100 மற்றும் சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் மனு சொத்தை 2 மற்றும் 3 ம் எதிர்மனுதாரர்களுக்கு உயில் எழுதி வைத்துள்ளதை இந்திய சாட்சிய சட்டம், பிரிவு 68ன் கீழ் நிரூபிக்கவில்லை என்றும், மேற்படி உயிலில் சாட்சி கையொப்பம் செய்தவர்களை இம்மனுவில் விசாரிக்கவில்லை என்றும், மேற்படி உயிலில் உள்ள தீர்ப்பாணை பெற்றவரின் கையொப்பம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், தீர்ப்பு கடனாளிகளில் பல நபர்கள் இறந்து விட்ட நிலையில், அவர்களது வாரிசுகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், எனவே மேற்படி காரணங்களின் அடிப்படையில் நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டார்.

**6.** 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் முன்வைக்கப்படவில்லை. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துபூர்வமான வாதுரை பரிசீலிக்கப்பட்டது.

7. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில்,
" மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

8. <u>தீர்வு</u> :-

**8.1** திருப்பூர் தாலுாக்கா, நெ.24, வீரபாண்டி கிராமம், க.ச.எண்.481/3ல் உள்ள 4.52 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மனு சொத்தானது ஆதியில் ஒரு பழனி மகன் முனியனுக்கு விவசாய பயன்பாட்டிற்காக அரசால் வழங்கப்பட்ட நிலம் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.

**8.2** மனுதாரர்கள் தரப்பில், பழனி மகன் முனியனுக்கும், தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், முனியன் அவருக்கு ஒதுக்கப்பட்ட மனு சொத்தை கைவிட்டு விட்டு எங்கு சென்றார் என்ற விபரம் தெரியவில்லை என்றும், தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் அவரது செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி முனியன் பெயருக்கு பதிலாக அவரது பெயரை வருவாய் ஆவணங்களில் மாற்றிக்கொண்டதாகவும், மேற்படி சட்டத்திற்கு புறம்பான செயல் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தவுடன் தீர்ப்பாணை பெற்றவரின் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு, தீர்ப்பு கடனளிகளான மனுதாரர்களின் பெயருக்கு கடந்த 12.11.1988ம் தேதி பட்டா வழங்கப்பட்டதாகவும், தீர்ப்பு கடனாளிகளான மனுதாரர்கள் மனு சொத்தில் கட்டிடங்கள் கட்டி குடியிருந்து வருவதாகவும், தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்தானதற்கு எதிராக அவர் தாக்கல் செய்த நீதிபேராணை மனு எண்.9630/1989 ஆனது கடந்த 29.03.1990ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதால் அசல் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணை டிஸ்சார்ஜ் ஆகிவிட்டது என்றும், எதிர்மனுதாரர்களுக்கு மனு சொத்தினை சுவாதீன ஒப்படைப்பு கோருவதற்கு உரிமையில்லை என்பதால் நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்யக்கோரி தீர்ப்பு

கடனாளிகளான மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.3** அசல் வழக்கு எண்.193/1996 ஆனது தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதார் / 1ம் மனுதாரர்/ வாதி முருகேசனால் தாவா சொத்து பொறுத்து விளம்புகை, சுவாதீன ஒப்படைப்பு, செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தீர்ப்பு கடனாளிகளான மனுதாரர்கள் மற்றும் பலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.4** அசல் வழக்கில் இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 17.07.1997ம் தேதியன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தீர்ப்பு பகரப்பட்ட தேதியில் இருந்து இரண்டு மாத காலத்திற்குள் தீர்ப்பு கடனாளிகளான மனுதாரர்கள் மற்றும் மனு சொத்தை ஆக்கிரமிப்பு செய்தவர்களை, அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புக்களை அகற்றி மனு சொத்தின் சுவாதீனத்தை தீர்ப்பாணை பெற்றவர்களின் சுவாதீனத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

**8.5** அசல் வழக்கு எண்.193/1996ல் பிறப்பிக்கப்பட்ட மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரி தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரரால் நிறைவேற்று மனு எண்.193/1996 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர்கள் முன்னிலையாகாத காரணத்தால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மனு சொத்தின் சுவாதீனத்தை தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறைவேற்று மனு நிலுவையில் இருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் இறந்து விட்டதால் E.A.No.85/2016ல்

பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் 2 மற்றும் 3 மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

**8.6** நிறைவேற்று மனு எண்.91/1997ல் தீர்ப்பு கடனாளிகளான இம்மனுதாரர்கள் மற்றும் பலருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கறவு செய்யக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்த E.A.No.14/2017 ஆனது கடந்த 26.04.2017ம் தேதி இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தள்ளுபடி உத்தரவுக்கு எதிராக மனுதாரர்கள் தாக்கல் செய்த CRP No.1757/2017 ஆனது மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் கடந்த 09.10.2017 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**8.7** அசல் வழக்கு எண்.193/1996ல் கடந்த 17.07.1997ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்புரையை கடந்த 19.01.2024ம் தேதி மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணையுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். அதில் தீர்ப்பு கடனாளிகள் மற்றும் பலர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், தாவா சொத்தின் 0.05 செண்ட் பூமியில் கிழபுறமாக தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் இருந்து வருவதாகவும், தாவா சொத்தின் மற்ற பகுதிகளில் தீர்ப்பு கடனாளிகளான மனுதாரர்கள் வீடுகள் கட்டி சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே தீர்ப்பு கடனாளிகளான மனுதாரர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றும், தாவா சொத்தில் தற்போது 150க்கும் மேற்பட்ட குடும்பத்தார்கள் வீடு கட்டி வசித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**8.8** மேலும், மேற்படி தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது, மனு சொத்தான திருப்பூர் தாலூக்கா, நெ. 24, வீரபாண்டி கிராமம், க.ச.எண்.481/3ல் உள்ள 4.52 ஏக்கர் பூமி பொறுத்து தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற

1ம் எதிர்மனுதாரருக்கு அரசால் வழங்கப்பட்ட பட்டா முறையான விசாரணைக்கு பின்னிட்டுதான் வழங்கப்பப்பட்டுள்ளது என்றும், தீர்ப்பாணை பெற்றவருக்கு முறையாக அறிவிப்பு வழங்காமல் அதனை ரத்து செய்தது சரியானது அல்ல என்றும், மேற்படி பூமி முழுவதும் விவசாய மேம்பாட்டிற்காக கொடுக்கப்பட்டுள்ளவை என்றும், அரசால் சட்ட நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்றி காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு தாவா பூமி கொடுக்கப்பட்ட பிறகு சட்ட வழிமுறைகளையும், சட்ட விதிகளையும் பின்பற்றாமல் காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரரை தாவா பூமியில் இருந்து அரசியல் தலையீட்டால் தூக்கி எறிவது சரியானதல்ல என்றும், தீர்ப்பு கடனாளிகளான இம்மனுதாரர்கள் மற்றும் பலருக்கு வழங்கப்பட்ட பட்டா விசாரணைக்கு பின்பு முறையாக கொடுக்கப்படாமல், அரசியல் தலையீட்டால் கொடுக்கப்பட்டுள்ளது என்று தீர்ப்பாணை பெற்றவருக்கு வழங்கப்பட்ட பட்டா குறித்தும், அதனை ரத்து செய்தது சரியானது அல்ல என்பது குறித்தும், மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா குறித்தும் முழுமையாக தீர்வு காணப்பட்டுள்ளது.

**8.9** இந்நிலையில், மனுதாரர்கள் அசல் வழக்கில் அவர்களது தரப்பு ஆட்சேபனையாக எடுத்த அதே சங்கதிகளையே இம்மனுவிலும் குறிப்பிட்டுள்ளார்கள். மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆட்சேபனைகள் இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு அசல் வழக்கில் ஏற்கனவே விசாரணை நீதிமன்றம் விரிவாகவும், தெளிவாகவும் தீர்வு கண்டுள்ளது.

**8.10** 1908 ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 47ஐ பரிசீலிக்கும்போது,

> **Section. 47 (1) :- Questions to be determined by the Court executing Decree: (1) All questions arising between the parties to the suit in which the decree was passed , or their representatives, and relating to the execution, discharge or satisfaction of the decree, shall be determined by the Court executing the decree and not by a separate suit.**

என்று நிறைவேற்று நீதிமன்றம் ஒரு தீர்ப்பாணையின் நிறைவேற்றுதல், விடுவித்தல் அல்லது திருப்தியுறுதல் (Execution, discharge or satisfaction of decree) குறித்து மட்டுமே மேற்படி சட்டம், பிரிவு 47ன் கீழ் தீர்வு காண இயலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவில், தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்தாகிவிட்டதாலும், அதற்கு எதிராக அவர் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதாலும் மற்றும் மனு சொத்து பொறுத்து தீர்ப்பு கடனாளிகளான இம்மனுதாரர்களுக்கு பட்டா வழங்கப்பட்டதாலும் அசல் வழக்கு எண்.193/1996ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை விடுவிக்கப்பட்டதாக (Discharge) குறிப்பிட்டுள்ளார்கள்.

**8.11** ஆனால், அசல் வழக்கு எண்.193/1996ல் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரையில் மேற்படி சங்கதிகளான தீர்ப்பாணை பெற்றவருக்கு வழங்கப்பட்ட பட்டா மற்றும் தீர்ப்பு கடனாளிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா ஆகியவை குறித்து விரிவாகவும், தெளிவாகவும் தீர்வு கண்ட பிறகு தான் அசல் வழக்கு எண்.193/1996ல் கடந்த 17.07.1997ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தீர்ப்பாணை தானாகவே விடுவிக்கப்பட்டதாக (Discharge) மனுதாரர்கள் கூறுவது இம்மனுவிற்கு பொருந்தாது மற்றும் அது ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**8.12** இதுகுறித்து **மாண்புமிகு உச்சநீதிமன்றம்** 2020 (1) LW 561 DB: Shanthilal Kothari Vs Sathrasaa Venkatram (died) and another என்ற வழக்கில் நிறைவேற்று நீதிமன்றம் மேல்முறையீட்டு நீதிமன்றமாக செயல்பட்டு தீர்ப்பாணையை மாற்ற முடியாது என்றும், நிறைவேற்று நீதிமன்றம் தீர்ப்பாணையை மீறி செயல்பட முடியாது என்றும், பிரிவு 47ல் மனுதாரர்கள் எழுப்பும் பிரச்சனை ஏற்கனவே அசல் வழக்கில் தீர்வு காணப்பட்டுள்ளதால் அது

முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பிறகு அதே பிரச்சனையை மனுதாரர்கள் மீண்டும் பிரிவு 47 மனுவின் மூலம் எழுப்ப இயலாது என்றும் முன் தீர்ப்பு வழங்கியுள்ளது.

**8.13** இம்மனுவில், அசல் வழக்கில் தீர்ப்பு கடனாளிகளான மனுதாரர்களால் ஏற்கனவே இதே சங்கதிகளை குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்து, விசாரணை நீதிமன்றத்தால் மேற்படி பிரச்சனைகளுக்கு விரிவாகவும், முழுமையாகவும் தீர்வு காணப்பட்டு, தாவா சொத்து பொறுத்து தீர்ப்பாணை பெற்றவரான காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட பட்டா சரியானது என்றும், அதனை ரத்து செய்து பிறப்பித்த உத்தரவு சரியானதல்ல என்றும் முடிவு செய்யப்பட்ட பிறகு, மனுதாரர்கள் மீண்டும் அதே சங்கதிகளை குறிப்பிட்டு மனு சொத்தின் சுவாதீனத்தில் அவர்கள் இருப்பதாக கூறி ம.சா.1 முதல் ம.சா.27 வரையிலான சாட்சிகளின் பெயரில் வழங்கப்பட்ட பட்டாக்களை ம.சா.ஆ.1,10,16,21,25,30,34,39,44,48,52,57,62,67,72,76,80,85,89,94 மற்றும் 97 வரையிலான சான்றாவணங்களாக தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறித்து ஏற்கனவே அசல் வழக்கில் முழுமையாக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அதற்கு எதிராக மனுதாரர்கள் மேல்முறையீடு தான் தாக்கல் செய்ய இயலும். அதிலும், மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக மனுதாரர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு எண்.34/2002 தள்ளுபடியாகியுள்ள விபரம் மனுதாரர்கள் தரப்பு சாட்சியான ம.சா.3ன் குறுக்கு விசாரணையின் மூலம் அறிய முடிகிறது.

**8.14** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களுக்கு மனு சொத்து பொறுத்து எழுதி வைத்த உயில் ஆவணம் மோசடியான ஒன்று என்றும், அதனை எதிர்மனுதாரர்கள் இந்திய சாட்சிய சட்டம், பிரிவு 68ன் கீழ் நிரூபிக்கவில்லை என்றும், தீர்ப்பு கடனாளிகளில் பல நபர்கள் இறந்ததற்கு பின்னிட்டு அவர்களது வாரிசுகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை

எடுக்காததால் நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டார்.

**8.15** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் மேற்படி வாதம் குறித்து பரிசீலிக்கும் போது, மனுசொத்து தீர்ப்பாணை பெற்றவரான காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமையுடையதாக அசல் வழக்கில் தீர்வு காணப்பட்டு, அவரால் மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அவர் இறந்து விட்ட காரணத்தால் E.A.No.85/2016ல் பிறப்பித்த உத்தரவின்படி அவர்களது வாரிசுகளான 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் அசல் மனுவில் 2 மற்றும் 3 மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். நிறைவேற்று மனுவில் தோன்றாத்தரப்பினரகளாக உள்ள தீர்ப்பு கடனாளிகளான இம்மனுதாரர்கள், தீர்ப்பாணை பெற்றவரான காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரர் மனு சொத்து பொறுத்து 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களுக்கு எழுதி வைத்துள்ள உயில் குறித்தும், அதன் செல்லும் தன்மை குறித்தும் கேள்வி கேட்க இயலாது. அதே போல், நிறைவேற்று மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள எதிர்மனுதாரர்களின் வாரிசுகளை அம்மனுவில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், இம்மனுவானது நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்யக் கோரி உரிமையியல் விசாரணை சட்டம், பிரிவு 47ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு என்பதால், மேற்படி மனு நிலைக்கத்தக்கதா மற்றும் அது அனுமதிக்கத்தக்கதா என்பது குறித்து மட்டும் தான் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டும் என்பதால் மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் மேற்படி வாதம் ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**8.16** எனவே, தீர்ப்பு கடனாளிகளான மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி சான்றாவணங்கள் குறித்தும், தீர்ப்பாணை பெற்றவரான காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட பட்டா குறித்தும் விசாரணை நீதிமன்றம் விரிவாக தீர்வு கண்டு தீர்ப்பாணை பிறப்பித்த பிறகு அதே சங்கதிகளை குறிப்பிட்டு இரண்டாவது சுற்று வழக்காக மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு

நிலைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.03.14 19:00:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருப்பூர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** :–

| | |
|---|---|
| ம.சா.1 | விஜயா |
| ம.சா.2 | விசாலாட்சி |
| ம.சா.3 | பாப்பாள் |
| ம.சா.4 | செல்வி |
| ம.சா.5 | பொன்னம்மாள் |
| ம.சா.6 | சரஸ்வதி |
| ம.சா.7 | அமுதா |
| ம.சா.8 | பழனியம்மாள் |
| ம.சா.9 | ஜெயா |
| ம.சா.10 | வசந்தாமணி |
| ம.சா.11 | பாப்பம்மாள் (எ) பாப்பாள் |
| ம.சா.12 | கருப்பாள் |
| ம.சா.13 | அருக்காணி |
| ம.சா.14 | லட்சுமி |
| ம.சா.15 | மயிலாள் |

| | |
|---|---|
| ம.சா.16 | சாந்தி |
| ம.சா.17 | அருக்காணி |
| ம.சா.18 | புஷ்பா |
| ம.சா.19 | சாந்தாமணி |
| ம.சா.20 | சாந்தி |
| ம.சா.21 | அருக்காணி |
| ம.சா.22 | R.ரமேஷ் |
| ம.சா.23 | பி.சசிக்குமார் |
| ம.சா.24 | க.பிரியா |
| ம.சா.25 | சி.அபீப் ரகுமான் |
| ம.சா.26 | முருகன் |
| ம.சா.27 | முருகேஷ்வரன் |

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :–

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 30.09.1999 | பட்டா | அசல் |
| ம.சா.ஆ.2 | – | வீட்டு வரி ரசீதுகள் ( 6 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.3 | – | குடிநீர் கட்டண ரசீதுகள் ( 3 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.4 | 30.12.2016 | E ரசீது மற்றும் தகவல் அறிவிப்பு | கணிணி அசல் |
| ம.சா.ஆ.5 | – | வெள்ளைச்சாமி குடும்ப அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.6 | – | விஜயா ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.7 | – | வெள்ளைச்சாமி ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.8 | – | விஜயா வாக்காளர் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.9 2 வரிசை | – | வெள்ளைச்சாமி மற்றும் விசாலாட்சி வாக்காளர் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.10 | – | HSD பட்டா எண்.1041/99 | அசல் |
| ம.சா.ஆ.11 | 24.01.2007 | கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.12 | 09.12.2015 | சொத்து வரி ரசீதுகள் ( 2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.13 | 09.12.2015 | குடிநீர் கட்டண ரசீது( 2 எண்ணிக்கை) | அசல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.14 | 27.12.2017 | மின்கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.15 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.16 | – | HSD பட்டா | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.17 | 28.03.2013 | சொத்து வரி ரசீது (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.18 | 28.03.2013 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.19 | 28.12.2017 | மின்கட்டண ரசீது (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.20 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.21 | – | HSD பட்டா எண்.1073/99 | அசல் |
| ம.சா.ஆ.22 | – | வீட்டுவரி ரசீதுகள் ( 3 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.23 | 22.11.2007 | சொத்து வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.24 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.25 | – | பொன்னம்மாள் பெயரிலுள்ள பட்டா | அசல் |
| ம.சா.ஆ.26 | 22.09.2007 | வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.27 | 26.11.2007 | குடிநீர் கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.28 | – | மின் கட்டண ரசீது (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.29 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.30 | – | சரஸ்வதி பெயரில் உள்ள பட்டா | அசல் |
| ம.சா.ஆ.31 | 22.09.2007 | வீட்டு வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.32 | 12.11.2008 | மின் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.33 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.34 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.35 | 16.07.2015 | சொத்து வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.36 | 16.07.2015 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.37 | 22.02.2018 | மின் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.38 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.39 | – | HSD பட்டா | அசல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.40 | – | சொத்து வரி ரசீது( 2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ41 | – | குடிநீர் கட்டண ரசீதுகள் ( 2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.42 | – | மின் கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.43 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.44 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.45 | 31.03.2005 | சொத்து வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.46 | 25.01.2017 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.47 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.48 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.49 | 24.09.2007 | வீட்டு வரி ரசீது | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.50 | 11.03.2004 | துணை வட்டாட்சியர் வழங்கிய இருப்பிட சான்றாவணம் | அசல் |
| ம.சா.ஆ.51 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.52 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.53 | 26.03.2008 | வீட்டு வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.54 | 19.01.2017 | பலவகை வரவு ரசீது மற்றும் குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.55 | – | பாப்பம்மாள் பெயரில் உள்ள மின்கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.56 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.57 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.58 | 10.03.2017 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.59 | 10.03.2017 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.60 | 22.08.2016 | கருப்பாள் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.61 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.62 | 10.05.1990 | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.63 | – | அருக்காணி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.64 | – | அருக்காணி பெயரில் உள்ள குடிநீர் கட்டண ரசீதுகள் ( 2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.65 | – | அருக்காணி பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.66 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.67 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.68 | – | வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.69 | – | குடிநீர் கட்டண ரசீதுகள் ( 2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ70 | – | மின்கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.71 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ72 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.73 | – | வீட்டுவரி ரசீது (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.74 | – | குடிநீர் கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.75 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.76 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.77 | 31.10.2016 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.78 | – | மின் கட்டண ரசீது (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.79 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.80 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.81 | 31.03.2009 | வீட்டு வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.82 | 05.12.2007 | பலவகை ரசீது | அசல் |
| ம.சா.ஆ.83 | 30.12.2015 | மின் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.84 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.85 | – | HSD பட்டா | அசல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.86 | – | குடிநீர் கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.87 | – | சொத்து வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.88 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.89 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.90 | – | வீட்டு வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.91 | 25.02.2017 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.92 | 23.02.2017 | மின் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.93 | – | ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.94 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.95 | – | சாந்தி பெயரில் உள்ள சொத்து வரி ரசீது( 2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.96 | – | ஆதார் அடையாள அட்டை | அசல் |
| ம.சா.ஆ.97 | – | HSD பட்டா | அசல் |
| ம.சா.ஆ.98 | – | மின்கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.99 | – | வீட்டுவரி ரசீது (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.100 | – | குடிநீர் கட்டண ரசீது ( 2 எண்ணிக்கை) | அசல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :– இல்லை

**<u>சாட்சிய சான்றாவணங்கள்</u>** :–

| | | | |
|---|---|---|---|
| சா.சா.ஆ.1 | – | கிராம கணக்கு | அலுவலக நகல் |
| சா.சா.ஆ.2 | – | கிராம கணக்கு | அலுவலக நகல் |
| சா.சா.ஆ.3 | – | கிராம கணக்கு | அலுவலக நகல் |
| சா.சா.ஆ.4 | – | மனுதாரர் தரப்பு சாட்சி 22 | அசல் |
| சா.சா.ஆ.5 | 11.01.2019 | அழைப்பாணை கடிதம் | அசல் |
| சா.சா.ஆ.6 | – | மனுதாரர் தரப்பு சாட்சிகள் 23, 24 | அசல் |
| சா.சா.ஆ.7 | – | மாவட்ட ஆட்சியர் கடிதம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| சா.சா.ஆ.8 | – | மாவட்ட ஆட்சியர் கடிதம் | அசல் |
| சா.சா.ஆ.9 | – | கிராம கணக்கு மற்றும் அடங்கல் | அலுவலக நகல் |

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.03.14 19:00:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)

திருப்பூர்.

**<u>சீரான உத்தரவு</u>**

**E.A.75/2017**
**in E.P.91/97**
**in**
**O.S.193/1996**
**14.03.2025**
**P.D.M.C, Tiruppur**